**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.67
https://ngmtamil.in/

# புறநானூறு காட்டும் மனித நேயமும் இயற்கையும்

**முனைவர் சி.பூங்கொடி,**

உதவிப் பேராசிரியர்,தமிழ்த்துறை, சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி,

சரவணம்பட்டி ,கோயமுத்தூர். 9047549671

oviyanithi94@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் இலக்கியங்களில் இயற்கை என்பது இயல்புகளுக்குக் காரணமாய் அமைவது. மனித வாழ்க்கையும் இயற்கையும் ஒன்றுக்கொன்று பிரிக்க முடியாத உறவுடன் சித்தரிக்கப்படுகின்றன. மனிதனின் உணர்வுகள், தொழில்கள், வாழ்வியல் நெறிகள் மற்றும் சமூகப் பழக்கவழக்கங்கள் அனைத்தும் இயற்கைச் சூழலோடு இணைந்து காணப்படுகின்றன. இயற்கைக் கூறுகள் மனித வாழ்வின் அங்கங்களாகப் படைக்கப்பட்டுள்ளன. வேளாண்மை, நீர் மேலாண்மை, உணவு உற்பத்தி, போர்முறை, வணிகம், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஆகியவை சிறப்பாக எடுத்துரைக்கப்படுகிறது.. புறநானூறில் மனித உணர்வையும் இயற்கையின் தன்மையும் ஆராய்வதே நோக்கமாகும்.

**முன்னுரை**

சங்ககாலத்தில் புலவர்கள் மனிதனும் இயற்கையும் ஒன்றோடு ஒன்றை இயன்ற வாழ்க்கையை மேற்கொண்டுள்ளனர். இயற்கையை இயற்கையாக மட்டுமல்லாது, வாழ்க்கையின் அடித்தளத்திற்கும் பயன்படுத்தியுள்ள பாங்கினை இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. பண்டைய தமிழர்களின் வாழ்க்கை முறையில் உள்ளதை உள்ளவாறு எடுத்துரைப்பாகால்தான் புறநானூறு தமிழர்களின் வரலாற்று கருவூலமாகத் திகழ்கிறது. மனித நேயத்தோடும், இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை மேற்கொண்டான் என்பதை ஆராய முற்படுகிறது.

**திறவுச் சொற்கள்**: உணவு, நீர், இயற்கை, அறம் கொடை, போர்

**உணவளித்தலின் சிறப்பு**

பழங்கால மன்னர்கள் மக்களுக்கும் இரவலர்க்கும் உணவு வழங்கியதோடு படை வீரர்களுக்கும் பெருஞ்சோறு அளித்துள்ளனர். பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதன் பாரத போர் முடியும் வரை பாண்டவர் ஐவருக்கும், கௌரவருக்கும், அவர்தான் படைவீரருக்கும் சோறு,அளித்த பெருமை கொண்டான் என்பதை,

அலங்கு உளைப் புரவி ஐவரொடு சினைஇ,

பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்! ( புறம் -2)

என்ற அடிகளில் பெருஞ்சோறு அளித்த சிறப்பினை அறிய முடிகிறது. இதனையே சிலப்பதிகாரம்

ஓர் ஐவர் ஈரைம் பதின்மர் உடன்று எழுந்த போரி

தாபெருஞ்சோறு போற்றாது தான் அளித்த சேரன்... (மங்கள வாழ்த்துப்பாடல்) (1)

மகாபாரதப் போரில் பாண்டவருக்கும் கௌரவருக்கும் உணவு அளித்த சேரனின் சிறப்பைக் குறிப்பிடுகிறது.

**பசிப்பிணி போக்குதல்**

சங்க கால மன்னர்களும் புலவர்களும் பசிப்பிணி அகற்றுவதிலும் வறுமையை ஒழிப்பதிலும் தலைசிறந்து விளங்கினார்கள் . சான்றோர்கள் தானங்களுள் சிறந்தது அன்னதானம் என்றும் 'உண்டி கொடுத்தோரே உயிர் கொடுத்தோர்' என்றும் கூறினர். உணவின் அவசியத்தை உணர்ந்த புலவர் மன்னன் பாண்டிய நெடுஞ்செழியனிடம், பசியால் வருந்துபவர்களுக்குத் தேவையான 'உணவைக் கொடுத்தவரே உயிர் கொடுத்தவர் ஆவார்' என்கிறார். இதனை,

நீரின்றி அமையா யாக்கைக்கு எல்லாம்

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே;

நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு

உடம்பும் உயிரும் படைத்திசினோரே.( ( புறம் -18,28-23)

என்ற அடிகள் நீர் இல்லாமல் உயிர்கள் வாழ முடியாது. ஆகவே உணவும் நீரும் வழங்குபவர்கள் உயிரையே வழங்குவோருக்கு ஒப்பானவர்கள் என்று இப்பாடல் எடுத்துரைக்கின்றது. இதனையே

அற்றார் அழி பசி தீர்த்தல் அஃதொருவன்

பெற்றான் பொருள்வைப் பழி (குறள்-226) (2)

கடுமையான பசியால் வாடுபவனுக்கு உதவுவதே சிறந்த செல்வமாக வள்ளுவர் குறிப்பிடுகிறார். நிலமும் நீரும் இணைந்து உயிரைத் தாங்குகின்றன என்பதையும் வலியுறுத்துகின்றன. பசிப்பிணி போக்குதல் அவசியம் என்பதும் பசி போக்குவதற்கு அக்காலத்தில் கொடுத்த முக்கியத்துவமும் புலனாகிறது.

**வாய்மையின் மேன்மை**

மன்னர்களின் புலவர்களும் வாய்மையின் வல்லுனர்களாகத் திகழ்ந்தார்கள். அரசன் வாய்மொழியைக் கடைபிடித்து வந்தால் மக்களும் அவ்வாறே உண்மையைப் பேசுவார்கள். 'மன்னன் எவ்வழி மன்னுயிர் அமுது என்பது மூதுரை.அவர்களின் சொல்லும் செயலும் நன்றாகவே இருந்தது அவர்கள் அரசு நெறியில் இருந்தும் அறவழியில் இருந்தும் மாறாத இயல்புடையவராய் இருந்தனர் என்பதை,

பாஅல் புளிப்பினும், பகல் இருளினும்,

திரியாச் சுற்றமொடு முழுது சேண் விளங்கி,( ( புறம் -2,16-29)

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

என்ற அடிகளில் அறிய முடிகிறது. மேலும் இதனையே

நிலம் பெயரினும் நின்சொல் பெயரல்**((** புறம் **- 3,14)**

எனவே தான் வள்ளுவரும்

யாமெய்யா க் கண்டவற்றுள் இல்லை எனத் தொன்றும்

வாய்மையின் நல்லப் பிற.**((**குறள் **-300) (3)**

என்கிறார் வள்ளுவர்.இயற்கையின் தன்மைகள் எல்லாம் மாறுபட்டாலும் அமைச்சர்களுக்குரிய பண்பிலிருந்து மன்னர்கள் மாறவில்லை என்பது அக்கால மன்னர்களின் வாய்மையினைக் காட்டுகிறது.

சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சிந்தனை

சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சிந்தனை இயற்கை வளங்களை அளவோடு பயன்படுத்த வேண்டும் என்ற கருத்து புறநானூற்றில் காணப்படுகிறது. மரங்களை அழிக்காமல் பாதுகா த்தல், விலங்குகளைத் துன்புறுத்தாமல் வாழ்தல், நீர்நிலைகளைப் பேணுதல் போன்ற சுற்றுச்சூழல் விழிப்புணர்வு சங்ககாலத்திலேயே இருந்தது.பாரியின் செயல் இன்றைய சுற்றுச்சூழல் பாதுகாப்புக் கொள்கைகளுக்கே முன்னோடியாக விளங்குகிறது.வள்ளல் பாரியின் இயற்கை நேயம்

**"**பூத்தலை அறாஅப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடாதாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பின் பாரி**"(** புறம் **-200)**

என்ற அடிகள் மனிதன் இயற்கையை உயிராக மதித்த சங்ககாலத் தமிழர்களின் பண்பாட்டை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. மனிதன் இயற்கையை நேசித்து பாதுகாத்ததைக் காட்டுகிறது. உலக சகோதரத்துவமும் இயற்கை நெறியும் கணியன் பூங்குன்றனார்

**"**யாதும் ஊரே யாவரும் கேளிர்**"**

**"**நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம்**"" (** புறம்**-192)**

மனிதன் இயற்கையுடனும் உலக உயிர்களுடனும் இணைந்து வாழ வேண்டும் என்ற உயர்ந்த சிந்தனையை இது வெளிப்படுத்துகிறது. ஆற்றில் செல்லும் தெப்பம்போல் மனித வாழ்க்கையும் இயற்கை நியதிப்படி நகர்கிறது. மனிதன் இயற்கையின் ஓர் அங்கம் என்பதைக் காட்டுகிறது.

**கொடை**

செய்நன்றி அறிதல்நன்றி மறவாது புலவர்கள் வாழ்த்தி மகிழ்ந்திருக்கின்றனர். வாழ்த்துதல் என்பது உயர்ந்தவர் கூறிய பண்பாகும் அவ்வகையில் மன்னர் பல்வேறு பரிசு பொருட்களையும் செல்வங்களையும் மக்களுக்கு அளித்ததால் புலவர்கள் மன்னர்களை வாழ்த்தினார்கள் மன்னனின் இழப்பு பேரிழப்பு என கருதி புலவர்கள் அவர்களிடம் கொண்ட நட்பின் காரணமாக தன் சென்னாவினால் மன்னனை பல ஆண்டுகளாக வாழ்வாயாக என்று வாழ்த்தினார் . எவ்வகையில் முதுகுடுமி பெருவெழுதியை நெட்டிமையார்

முந்நீர் விழவின், நெடியோன்

நல் நீர்ப் பஃறுளி மணலினும் பலவே! (( புறம் 9,9-10)

பஃறுளி ஆற்று மணலிலும் பல ஆண்டுகள் வாழுமாறு வாழ்த்துகிறார். இதே போல் ஆலந்தூர் கிழார் கிள்ளி வளவனை கொண்டல் மாமழை பொழிந்த நூல்கள் துளியிலும் பலவே என்று வாழ்த்திய பங்கு போற்றுதற்குரியது ஆகும் . மன்னன் அறநெறி வழுவாது வாழ்ந்ததால் புலவர்கள் புகழ்ந்தார்கள் என்பது தெரிகிறது.

**முறையாக அரசு ஆளுதல்**

சங்ககாலத்தில் மன்னனின் ஆட்சி பொறுத்து ஒரு நாட்டின் வளம் தீர்மானிக்கப்படுகிறது. அவன் வாழ்நாளில் பெரும்பகுதியை குடிமக்களுக்காக தியாகம் செய்பவன் குடிகளுக்காகவே அரசாட்சி என்பது அக்கால வழக்கமாக இருந்தது மன்னர்கள் குடிகளின் கருத்தரறிந்து அதற்கேற்ப ஆட்சி புரிந்தனர் என்பதை,

பிறர்பழி கூறுவோர் மொழிதேறலையே;

வந்து, அடி பொருந்தி, முந்தை நிற்பின், (புறம் 10,2-5)

அரசனின் பெருமையும் வெற்றியும் அறநெறியில் ஆட்சி செய்வதில்தான் உள்ளது. நீதியுடனும் நேர்மையுடனும் ஆட்சி செய்தால் நாடு வளரும் என உணர்த்துகிறது.

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு

இறையென்று வைக்கப்படும்." (குறள் 388) (4)

நல்லாட்சியின் முக்கியத்துவத்தை விளக்குகிறது. மன்னனின் ஆட்சி கொடுங்கோல் ஆகிவிட்டேன் வான் பொய்த்து விடும் என்பது தெளிவாகிறது.

**நீர் வளம் பெருக்குதல்**

மனிதனின் தேவைகளை தேவைகளில் அடிப்படை நீராகும் நீரின் அவசியத்தை குடபுலவியனார் நீர்நிலைகளில் தண்ணீர் பற்றி நீரின்றி உலகில் எவ்வுயிரும் நிலைத்து வாழ இயலாது என்பதை உணர்ந்து நீர்நிலை பெருக்கும் வழிமுறைகளை மன்னனிடம் கூறுகின்றார். பழைய நீர்நிலைகளைச் செப்பம் செய்தும் , நீர்நிலைகள் இல்லாத இடத்தில் ஏரி குளம் முதலான நீர்நிலைகளைப் பெருக்கியும் உணவு உற்பத்தி மிகச்செய்தும் நாட்டைச் செழிக்கச் செய்ய வேண்டும் என்கிறார். இதனை,

நிலன் நெளி மருங்கில் நீர்நிலை பெருகத்

தட்டோர் அம்ம இவண் தட்டோரே;

தள்ளாதோர் இவண் தள்ளாதோரே (( புறம் - 18,29-30)

என்ற அடிகள் உணர்த்துகின்றன. நீரை குளிர்ந்த இடத்தில் விளக்கச் செய்தவரே இவ்வுலகில் புகழைத் தருவர் அவ்வாறு செய்யாதவர் இப்போ புவியில் தம் பெயரை நிலை நிறுத்தாதவர் ஆவார் என்று புலவர் கூறுகிறார்.இதனையே

"வருவிசைப் புனலைக் கற்சிறை போல

ஒருவன் தாங்கிய பெருமை" ( தொல் – பொருள் ) ( 5)

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

தொல்காப்பியர் நீர் வளத்தின் அவசியத்தையும், நீர்நிலைகளைப் பாதுகாத்து பெருக்குவதன் முக்கியத்துவத்தையும் மறைமுகமாகக் குறிப்பிடுகிறார். குறிப்பாக மருதநில வாழ்க்கை, உழவு, ஏரி, குளம், ஆறு போன்ற நீராதாரங்களோடு தொடர்புபடுத்திப் பேசுகிறார்.

வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக் குடி உயரும்
குடி உயரக் கோல் உயரும்
கோல் உயரக் கோன் உயர்வான்.

என்று ஔவையார் பாடியுள்ளார் இது நீர்நிலைகளைப் பெருக்குவதன் அவசியத்தை நேரடியாக வலியுறுத்துகிறது. சங்ககாலத்தில் நீர் பெருக்குதலுக்கு கொடுத்த முக்கியத்துவத்தை அறிய முடிகிறது.

**இயற்கையை அழித்தல்**

சங்க காலத்தவர் பகைவருடைய நாட்டையும் அரணையும் அழித்து, அவர் நிலங்களில் கழுதை பூட்டிய ஏர்களைக் கொண்டு உழவு செய்தனர். இயற்கை வளங்களையும் தீயூட்டி அழித்தனர். இதனை

கரும்பு அல்லது காடறியாப்
பெருந்தண் பணை பாழாக,
ஏம நன்னாடு ஒள்ளெரி ஊட்டினை(( புறம் **- 15,16-18)**

இப்பாடல் போரினால் வளமான நாடு எவ்வாறு அழிவடைந்தது என்பதைச் சித்தரிக்கிறது. இயற்கை அழிந்துள்ளது அறிய முடிகிறது. மன்னர்கள், வீரர்கள்,வீரம் ஒன்றே இலக்காகக் கருதி நெஞ்சில் ஈரம் இல்லாது நடந்து இருப்பதைக் காண முடிகிறது.

அறப்போர் முறை

மறப்போர் முறையை பின்பற்றிய தமிழர்கள் நாளடைவில் அறப்போர் முறையை கையாண்டனர். அதாவது அறநூலில் கூறப்பட்ட அறக்கொள்கையின் படியே போரானது நிலவியது. போர் தொடங்கும் முன்னர் பசுக்களும் அவற்றின் பண்புத்தன்மை உடைய பார்ப்பன மக்களும் பெண்டிரும், பிணியுடையோரும், தென்திசைக் கண் வாழும் முன்னோர்களைப் பாதுகாத்து அவர்களுக்கு ஆற்ற வேண்டிய நோன்பில், சோறும் எள் நீரும் அளிப்பவரும் புதல்வர்களைப் பெறாதவர்களும் பாதுகாப்பான இடத்திற்கு சென்று சேருங்கள் என்று முழக்கம் செய்தனர். இதனை

ஆவும் ஆன் இயற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம் அம்பு கடி விடுதும் நும் அரண் சேர்மின் **(** புறம்**-9,1-5)**

என்ற அடிகள் உணர்த்துகின்றன. மேலும் தொல்காப்பியம், புறத்திணையியலில்

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

“தானை யானை குதிரை என்ற

நோனார் உட்கும் மூவகை நிலையும்” **(6)**

போரில் அறத்தை நிலை நாட்டிதை அறிய முடிகிறது. கண்ணகி மதுரையை எரிக்கும்போது தீக்கடவுளுக்குக் கூறும் அறநெறிச் சொற்களாக இவை அமைந்துள்ளன.

“பார்ப்பார் அறவோர் பசுப் பத்தினிப் பெண்டிர்

மூத்தோர் குழவி எனும் இவரைக் கைவிட்டு

தீத்திறத்தார் பக்கமே சேர்க”(கட்டுரைக் காதை") **(7)**

பண்டையக் காலத்தில் தமிழர்கள் தம் பண்பாட்டிலிருந்து மாறாது அறக் கொள்கையைக் கடைப்பிடித்து வாழ்ந்தனர் என்பது தெளிவாகிறது.

**பிழை செய்தால் பொறுத்தல்**

பிழை செய்தால் மன்னிக்கும் குணம் தனி மனிதனை காட்டிலும் அரசனுக்கு முக்கியமானதாகும். அவ்வகையில் ஒரு நல்ல அரசனின் சிறந்த குணங்களுள் ஒன்றாக சங்க இலக்கியங்களில் போற்றப்படுகிறது. வீரத்துடன் சேர்ந்து பொறுமையும் மன்னிக்கும் மனப்பான்மையும் அரசனுக்குத் தேவையான பண்புகளாகக் கருதப்பட்டன.இதனை

மண் திணிந்த நிலனும் நிலன் ஏந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும் வளித் தலைஇய தீயும்
போற்றார்ப் பொறுத்தலும் சூழ்ச்சியது அகலமும்
வலியும் தெறலும் அளியும் உடையோய் ( புறம்**- 2, 1-8)**

இந்த அடிகளில் மன்னனின் சிறந்த பண்புகளாக மன்னிக்கும் குணத்தை குறிப்பிடுகின்றது.

**முடிவுரை**

சங்க காலத்தில் பசிப்பிணியை போக்கும் பண்பு உயர்ந்ததாக கருதப்பட்டது. அரசாட்சி செய்யக்கூடிய மன்னனுக்கு அன்பும் அருளும் இருக்க வேண்டும் என்று புலவர்கள் அறிவுறுத்தியது அறவுரையாக ஏற்றிய பாங்கு புலனாகிறது. மன்னன் முறையான ஆட்சியை செய்ததால் மக்கள் துன்பமின்றி வாழ்ந்தனர். நாடு வளமிக்க இருந்ததை அறிய முடிகிறது. மனித பண்புகள் பலவற்றை இயற்கையின் வாயிலாக உணர்த்தி இயற்கையும் மனிதத்தையும் இரு கண்களாக போற்றியுள்ளமை புலப்படுகிறது.

**துணை நூல் பட்டியல்**

[1.] சிலப்பதிகாரம் தெளிவுரை. ஞா. மாணிக்கவாசகன உமா பதிப்பகம்.

[2.] திருக்குறள், பரிமேலழகர் உரை.

[3.] திருக்குறள், பரிமேலழகர் உரை.

[4.] திருக்குறள், பரிமேலழகர் உரை

[5.] தொல்காப்பியம் பொருள் அதிகாரம், இளம்பூரனார் உரை.

[6.] தொல்காப்பியம் பொருள் அதிகாரம், இளம்பூரனார் உரை.

[7.] சிலப்பதிகாரம் தெளிவுரை. ஞா. மாணிக்கவாசகன். உமா பதிப்பகம்.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)